முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA2 பரீட்சை – 2016 சனவரி

## (AA21) உயர் நிதிக் கணக்கீடு

(Advanced Financial Accounting)

2016-01-30
காலை
[8.45 – 12.00]

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசித்து விளங்கிக்கொள்ள : 15 நிமிடங்கள்*

*விடையெழுத : 03 மணித்தியாலம்*

பக்கங்கள் : 12
வினாக்கள் : 10

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) ***விடைகள்*** *யாவும் உமக்கு வழங்கப்படும்* ***விடைப் புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருப்பின் அவற்றை தெளிவாகக் கூறுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்களைப் பாவித்தல் அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொல் நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் உள்ளடக்கப்பட்டுள்ள செயல் வினைச் சொல்லின் பொருள் வரையறையின் அடிப்படையில் அந்தந்த வினாக்களுக்கு விடையளிக்கப்படல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பிரிவு A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

இந்தப் பிரிவிலுள்ள ஆறு (06) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

*வினா இலக்கம்* ***1.1*** *முதல்* ***1.6*** *வரையிலான வினாக்களுக்கு மிகவும் சரியான விடையினைத் தெரிவுசெய்து, உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கங்களை ஒன்றின்கீழ் ஒன்றாக எழுதி அவற்றிற்கு எதிரே நீர் தெரிவுசெய்த விடையின் இலக்கத்தினை எழுதுக.*

**1.1** கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் இலாப நோக்கமற்ற அமைப்பான ஒரு விளையாட்டுக் கழகத்தின் 2015 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான ஏடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டன.

**(a)** அங்கத்தவர் ஒருவரின் வருடாந்த அங்கத்துவக் கட்டணம் (சந்தா) ரூ. 9,000/-.

**(b)** 2014 ஏப்ரல் 01 ஆந் திகதி நிலுவையில் வருமதியாக இருந்த சந்தா ரூ. 81,000/-; முன்னதாகப் பெறப்பட்ட சந்தா ரூ. 45,000/-.

**(c)** 50 அங்கத்தவர்கள் நடப்பு ஆண்டிற்கான சந்தாவினைச் செலுத்தியிருந்தனர். அவர்களுள் 8 அங்கத் தினர் முன்னைய ஆண்டில் நிலுவையிலிருந்த சந்தாவினையும் செலுத்தியிருந்தனர்.

**(d)** 7 அங்கத்தவர்கள் அடுத்த ஆண்டிற்கான சந்தாவையும் செலுத்தியிருந்தனர்.

**(e)** 2015 மார்ச் 31 ஆந் திகதி விளையாட்டுக் கழகத்தின் பதிவேடுகளின்படி 60 அங்கத்தவர்கள் இருந்தனர். ஒரு அங்கத்தவர் விளையாட்டுக் கழகத்தில் இணையும் ஆண்டில் முழு ஆண்டுச் சந்தாவும் அந்த ஆண்டின் வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படும்.

2015 மார்ச் 31 ஆந் திகதி சந்தாத் தொகைக் கணக்கைத் **தயாரிக்குக**. (03 மொத்தம்)

**1.2** கீழ்வரும் தகவல்கள் பெறுமதிசேர் வரி (VAT) தேவைகளுக்காக பதிவு செய்யப்பட்ட வழங்குநரான, உள்நாட்டில் பொதி விநியோகச் சேவையினை (courier) வழங்கும் **வ/வு டோர் ரூ டோர் (தனி) கம்பனியின்** ஏடுகளிலிருந்து 2015 செப்ரெம்பர் மாதத்திற்காக பிரித்தறியப்பட்டவையாகும் :

| | **ரூ.** |
|---|---|
| VAT பரிப்புடைய பொதி விநியோகச் சேவை வழங்கல்கள் | 18,463,000 |
| செல்லுபடியான வரி விற்பனைப் பட்டியல்களால் சான்றுப்படுத்தப்பட்ட கொள்வனவுகள் | 6,382,000 |
| VAT பரிப்புடைய செல்லுபடியான வரி விற்பனைப் பட்டியல்களால் சான்றுப்படுத்தப்பட்ட ஏனைய செலவுகள் | 1,312,000 |

VAT வீதம் 12% எனக் கொள்க.

2015 செப்ரெம்பர் 30 ஆந் திகதியில் VAT கட்டுப்பாட்டுக் கணக்கினைத் **தயாரிக்குக**. (03 மொத்தம்)

**1.3** கீழ்வருவன தொடர்பில் பரிப்பு வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிக்கான 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளைக் கூறுக.

(a) குறைந்தபட்ச பணிப்பாளர்களின் எண்ணிக்கை

(b) பொதுமக்களுக்கு சாதாரண பங்குகளை வழங்குதல் (04 மொத்தம்)

**1.4** கீழ்வருவன தொடர்பில் 1890 ஆம் ஆண்டின் பங்குடமை ஒழுங்குச் சட்டத்தின் (Partnership Ordinance) ஏற்பாடுகளைக் கூறுக.

(a) மூலதனம் மீதான வட்டி

(b) பங்காளர்களின் ஊதியம் (04 மொத்தம்)

**1.5** ஒரு உரிமையாண்மைச் சாதனத்திற்கும் (equity instrument) கடன் சாதனத்திற்கும் (debt instrument) இடையிலான பிரதான வேறுபாடுகள் இரண்டு (02) **கூறுக**. (04 மொத்தம்)

**1.6** LKAS 02 - தொக்குகள் நியமத்திற்கு அமைய பரிந்துரைக்கப்பட்ட இரண்டு கிரயச் சூத்திரங்களைக் கூறுக. (02 மொத்தம்)

*பிரிவு A யின் முடிவு*

## பகுதி B

இந்தப் பிரிவிலுள்ள ஐந்து (05) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 02

2015 யூலை 31 ஆந் திகதி வியாபார சென்மதிகள் கட்டுப்பாட்டுக் கணக்கு (பொதுப் பேரேட்டில் உள்ளவாறு) ரூ. 118,300/- செலவு மீதியினை காட்டிய அதேவேளை உப பேரேட்டின்படியான தனித்தனிக் கணக்குகளின் கூட்டுத்தொகை ரூ. 118,800/- ஆக இருந்தது. பின்னர் மேற்கொண்ட செவ்வை பார்த்தல் வேறுபாட்டிற்கான காரணங்களாக கீழ்வருவனவற்றைக் காட்டியது.

(1) 2015 யூலை மாதத்திற்காகப் பெறப்பட்ட மொத்தக் கழிவுகள் ரூ. 11,700/- சென்மதிகள் கட்டுப்பாட்டுக் கணக்கில் சரியாகப் பதிவு செய்யப்பட்டபோதிலும் தனித்தனிக் கணக்குகளில் பதிவு செய்யப் படவில்லை.

(2) சென்மதியாளர் பேரேட்டின் தனித்தனிக் கணக்கு மீதிகளின் நிரல் ரூ. 7,000/- இனால் மிகையாகக் கூட்டப்பட்டிருந்தது.

(3) 2015 யூலை மாதத்திற்கான கொள்வனவு நாளேடு ரூ.20,000/- இனால் மிகையாக கூட்டப்பட்டிருந்தது.

(4) 2015 யூலை மாதத்தின்போது வழங்குநரான **சுப்பர் ஃபஷன் நிறுவனத்திற்கு** செலுத்த வேண்டியிருந்த ரூ. 2,700/-, அந்த நிறுவனத்திலிருந்து கிடைக்க வேண்டிய தொகைக்கு எதிராக எதிரீடு (set-off) செய்யப்பட்டது. இது உரிய உப பேரேட்டுக் கணக்கில் சரியாக பதிவு செய்யப்பட்ட போதிலும் பொதுப் பேரேட்டில் உரிய கட்டுப்பாட்டுக் கணக்கில் தவறவிடப்பட்டிருந்தது.

(5) வழங்குநர் ஒருவருக்கு மேற்கொள்ளப்பட்ட காசுக் கொடுப்பனவு ரூ. 4,500/- உரிய கட்டுப்பாட்டுக் கணக்கில் சரியாகப் பதிவு செய்யப்பட்டபோதிலும், வழங்குநர் உப பேரேட்டுக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

**நீர் செய்ய வேண்டியது ,**

கீழ்வருவனவற்றைக் **தயாரிக்குக** :

(a) பொதுப் பேரேட்டில் திருத்தப்பட்ட வியாபார சென்மதிகள் கட்டுப்பாட்டுக் கணக்கு

(b) திருத்தப்பட்ட வியாபார சென்மதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியை சென்மதிகள் உப பேரேட்டு தனித் தனிக் கணக்கு மீதிகளின் மொத்தத் தொகையுடன் கணக்கிணக்கம் செய்யும் கூற்று

(05 மொத்தம்)

## வினா 03

***ஹை-ஃபை (தனி) கம்பனியின்*** 2015 செப்ரெம்பர் மாதத்திற்கான காசேட்டின் வங்கி நிரல், வங்கிக் கூற்று மற்றும் 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதியில் தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்க கூற்று ஆகியன கீழே தரப்பட்டுள்ளன :

**ஹை-ஃபை (தனி) கம்பனி**
**2015 செப்ரெம்பர் மாதத்திற்கான காசேட்டு வங்கி நிரல்**

| திகதி | விபரம் | | வரவு (ரூ.) | செலவு (ரூ.) | மீதி (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 2015.09.01 | மீதி | | - | - | (375,050) |
| 2015.09.02 | காசு வைப்பு | | 425,500 | | 50,450 |
| 2015.09.05 | கடன்கொடுத்தோர் கொடுப்பனவு | 750131 | | 38,000 | 12,450 |
| 2015.09.10 | பெறுமதிசேர் வரி (VAT) கொடுப்பனவு | 750132 | | 125,200 | (112,750) |
| 2015.09.12 | கடன்கொடுத்தோர் கொடுப்பனவு | 750133 | | 73,350 | (186,100) |
| 2015.09.15 | வாடகைக் கொடுப்பனவு | 750134 | | 50,700 | (236,800) |
| 2015.09.15 | காசு வைப்பு | | 120,000 | | (116,800) |
| 2015.09.18 | கடன்பட்டோர் வைப்பு | | 123,000 | | 6,200 |
| 2015.09.18 | காசு வைப்பு | | 254,000 | | 260,200 |
| 2015.09.21 | பராமரிப்புக் கொடுப்பனவு | 750135 | | 12,000 | 248,200 |
| 2015.09.21 | கடன்கொடுத்தோர் கொடுப்பனவு | 750136 | | 83,000 | 165,200 |
| 2015.09.25 | சம்பளம் - நேரடி மாற்றல்கள் | | | 223,000 | (57,800) |
| 2015.09.30 | காசோலை வைப்பு | 123156 | 50,000 | | (7,800) |
| 2015.09.30 | மீதி | | - | - | (7,800) |

**ஹை-ஃபை (தனி) கம்பனி**

**2015 செப்ரெம்பர் மாதத்திற்கான வங்கிக் கூற்று**

| திகதி | விபரம் | | வரவு (ரூ.) | செலவு (ரூ.) | மீதி (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 2015.09.01 | மீதி | | - | - | (172,550) |
| 2015.09.01 | காசோலை வைப்பு | 148350 | - | 50,000 | (122,550) |
| 2015.09.01 | காசோலைக் கொடுப்பனவு | 750128 | 125,000 | | (247,550) |
| 2015.09.02 | காசு வைப்பு | | | 425,500 | 177,950 |
| 2015.09.11 | காசோலைக் கொடுப்பனவு | 750132 | 125,200 | | 52,750 |
| 2015.09.15 | காசு வைப்பு | | | 120,000 | 172,750 |
| 2015.09.18 | நேரடி வைப்பு | Ref. 12465974 | | 123,000 | 295,750 |
| 2015.09.18 | காசு வைப்பு | | | 254,000 | 549,750 |
| 2015.09.22 | காசோலைக் கொடுப்பனவு | 750135 | 12,000 | | 537,750 |
| 2015.09.23 | நேரடி வைப்பு | Ref. 26487582 | | 93,000 | 630,750 |
| 2015.09.23 | காசோலைக் கொடுப்பனவு | 750131 | 38,000 | | 592,750 |
| 2015.09.25 | மாற்றல் | Ref. 32648751 | 223,000 | | 369,750 |
| 2015.09.30 | நிலையியற் கட்டளை | Loan No. 62587413 | 57,000 | | 312,750 |
| 2015.09.30 | மேலதிகப்பற்று வட்டி | | 2,500 | | 310,250 |
| 2015.09.30 | காசோலைக் கொடுப்பனவு | 750133 | 73,350 | | 236,900 |
| 2015.09.30 | காசோலைக் கொடுப்பனவு | 750134 | 50,700 | | 186,200 |
| 2015.09.30 | மீதி | | | | 186,200 |

**ஹை-ஃபை (தனி) கம்பனி**

**2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வங்கிக் கணக்கிணக்கக் கூற்று**

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| செம்மையாக்கப்பட்ட காசேட்டு மீதி – 2015.08.31 (மேலதிகப் பற்று) | | (375,050) |
| **கூட்டு:** சமர்ப்பிக்கப்படாத காசோலைகள்: | | |
| 750120 | 127,500 | |
| 750128 | 125,000 | 252,500 |
| **கழி:** தேறாத வைப்புகள்: | | |
| 148350 | | (50,000) |
| **2015.08.31 செப்ரெம்பர் 30 இல் வங்கிக் கூற்றின்படி மீதி** | | **(172,550)** |

***நீர் செய்ய வேண்டியது ,***

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2015 செப்ரெம்பர் மாதத்திற்கான செம்மையாக்கப்பட்ட காசேடு

(b) 2015 செப்ரெம்பர் 30 இல் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று (05 மொத்தம்)

## வினா 04

**வரையறுக்கப்பட்ட ஹிருண் (தனி) கம்பனியின்** 2015 டிசெம்பர் மாதத்திற்கான சம்பளப் பட்டியற் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது :

| | ரூ. |
|---|---|
| மொத்தச் சம்பளம் | 7,570,000 |
| **கழிவுகள் :** | |
| ஊழியர் சேமலாப நிதி (EPF) @ 8% | (605,600) |
| **நிகர சம்பளம்** | **6,964,400** |

கம்பனியானது ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) 12% உம், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு (ETF) 3% உம் பங்களிப்புச் செய்கின்றது.

**நீர் செய்ய வேண்டியது ,**

**ஹிருண் (தனி) கம்பனியின்** காசு தொடர்பான பதிவுகள் உட்பட சம்பளம், EPF மற்றும் ETF கொடுப்பனவு களை பதிவு செய்வதற்கு நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் **தயாரிக்குக.** (05 மொத்தம்)

## வினா 05

**விராஜ், ரங்கா** மற்றும் **இந்திக** ஆகியோர் இலாப, நட்டங்களைச் சமமாக பகிரும் பங்குடமை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர். 2015 மார்ச் 31 ஆந் திகதி இந்திக பங்குடமையிலிருந்து ஓய்வுபெறத் தீர்மானித்தார் :

(1) 2015 மார்ச் 31 ஆந் திகதி பங்குடமைக் கணக்கேடுகளிலிருந்து கீழ்வரும் மீதிகள் பிரித்தறியப்பட்டன :

| **ஆதனம், பொறி மற்றும் உபகரணம்** | **கிரயம் (ரூ.)** | **திரள் தேய்மானம் (ரூ.)** |
|---|---|---|
| காணி | 2,300,000 | - |
| கட்டடங்கள் | 1,575,000 | 393,000 |
| மோட்டார் வாகனம் | 2,500,000 | 1,000,000 |

| **மீதிகள்** | **விராஜ்** | **ரங்கா** | **இந்திக** |
|---|---|---|---|
| மூலதனக் கணக்கு (Cr) (ரூ.) | 2,000,000 | 2,000,000 | 2,000,000 |
| நடைமுறைக் கணக்கு (Dr) (ரூ.) | 50,000 | 25,000 | 30,000 |

(2) **இந்திக** ஓய்வுபெற்ற திகதியில் நடைமுறையல்லாச் சொத்துக்கள் கீழ்வருமாறு மீள்மதிப்புச் செய்யப்பட்டன :

| | |
|---|---|
| காணி | ரூ. 2,950,000/- |
| கட்டடங்கள் | ரூ. 1,700,000/- |
| மோட்டார் வாகனம் | ரூ. 1,250,000/- |

(3) 2015 மார்ச் 31 ஆந் திகதியில் பங்குடமையின் நன்மதிப்பு ரூ. 600,000/- ஆக மதிப்பிடப்பட்டது. இந்த நன்மதிப்பினை கணக்கேடுகளில் காட்டாதிருக்க பங்காளர்கள் தீர்மானித்தனர். இது **இந்திகவுக்கு** செலுத்த வேண்டிய தொகையினைக் கணிப்பதற்காக மாத்திரம் கணக்கிற் கொள்ளப்படுகின்றது.

(4) **இந்திக** ஓய்வு பெற்றதன் பின்னர் **விராஜ்** மற்றும் **ரங்கா** இலாப, நட்டங்களை முறையே 3 : 2 விகிதத்தில் பகிருவதற்குத் தீர்மானித்தனர்.

(5) பங்குடமை உடன்படிக்கையின்படி, ஓய்வு பெற்ற பங்காளருக்கு மூலதனத்தொகையின் மீது செலுத்தப்பட வேண்டிய வட்டி செலுத்தப்பட மாட்டாது.

**நீர் செய்ய வேண்டியது :**

2015 மார்ச் 31 ஆந் திகதி இந்திக ஓய்வு பெற்றதனைத் தொடர்ந்து பங்காளர் மூலதனக் கணக்குகள் மற்றும் பங்காளர் நடைமுறைக் கணக்குகளை நிரல்வடிவில் **தயாரிக்குக**. (05 மொத்தம்)

## வினா 06

**இம்றாஸ், புத்திக** மற்றும் **மஹீ** ஆகியோர் பங்குடமை வியாபாரம் ஒன்றில் ஈடுபட்டுள்ளனர். பங்குடமை ஒப்பந்தம் கீழ்வருவனவற்றிற்கு ஏற்பாடு செய்கின்றது :

(1) இலாப, நட்டங்கள் **இம்றாஸ், புத்திக** மற்றும் **மஹீ** ஆகியோருக்கிடையே 2 : 2 : 1 விகிதத்தில் பகிரப்படும்.

(2) பங்காளர் மூலதனங்கள் மீது வட்டி செலுத்தப்படுவதில்லை.

(3) பங்காளர்களின் எடுப்பனவுகள் மீது ஆண்டிற்கு 5 % வட்டி அறவிடப்படும்.

(4) **புத்திக** மற்றும் **மஹீ** ஆகிய ஒவ்வொருவரும் மாதாந்தம் ரூ. 2,000/- சம்பளம் பெற உரித்துடையவராவர்.

பங்குடமை ஏடுகளிலிருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தறியப்பட்டன :

| | **வரவு (ரூ.'000)** | **செலவு (ரூ.'000)** |
|---|---|---|
| 2014 ஏப்ரல் 01 ஆந் திகதி பங்காளர் மூலதனக் கணக்குகள்: | | |
| **இம்றாஸ்** | | 2,000 |
| **புத்திக** | | 2,000 |
| **மஹீ** | | 1,000 |
| 2014 ஏப்ரல் 01 ஆந் திகதி பங்காளர் நடைமுறைக் கணக்குகள்: | | |
| **இம்றாஸ்** | 50 | |
| **புத்திக** | 25 | |
| **மஹீ** | | 10 |
| பங்காளர் எடுப்பனவுகள்: **இம்றாஸ்** (2014 யூன் 01 ஆந் திகதி) | 48 | |
| **புத்திக** (2014 மே 01 ஆந் திகதி) | 24 | |
| **மஹீ** (2014 டிசெம்பர் 15 ஆந் திகதி) | 60 | |

2015 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிகர இலாபம் ரூ. 695,000/-.

**நீர் செய்ய வேண்டியது ,**

பங்குடமையின் 2015 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான பகிர்வுக் கணக்கினைத் **தயாரிக்குக.**

(05 மொத்தம்)

*பிரிவு B யின் முடிவு*

# பிரிவு C

இந்தப் பிரிவிலுள்ள மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 07

**ரணில், அனுர** மற்றும் **நாமல்** ஆகியோர் இலாப, நட்டங்களை முறையே 3 : 1 : 2 எனும் விகிதத்தில் பகிரும் வகையில் **ரண்மல் டிரேடர்ஸின்** பங்காளர்கள் ஆவர்.

பங்குடமை உடன்படிக்கை கீழ்வருவனவற்றிற்கு ஏற்பாடு செய்கின்றது :

- **ரண்மல் டிரெடர்ஸின்** முகாமையாளராக பணிபுரியும் **அனுரவுக்கு** வருடாந்தம் ரூ. 50,000/- சம்பளமாக செலுத்தப்படும்.
- ஆண்டின் இறுதியிலுள்ள மூலதனக் கணக்கு மீதிகள் மீது ஆண்டிற்கு 5 % வட்டி செலுத்தப்படும்.

2015 மார்ச் 31 ஆந் திகதி **ரண்மல் டிரேடர்ஸின்** பரீட்சை மீதி கீழ்வருமாறு :

**2015 மார்ச் 31 இல் பரீட்சை மீதி**

| | வரவு (ரூ.'000) | செலவு (ரூ.'000) |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில்: | | |
| காணி | 1,300 | |
| கட்டடம் | 900 | |
| அலுவலக உபகரணம் | 300 | |
| 2014 ஏப்ரல் 01 ஆந் திகதி தேய்மான ஏற்பாடு : | | |
| கட்டடம் | | 45 |
| அலுவலக உபகரணம் | | 120 |
| வியாபார சென்மதிகள் | | 274 |
| வியாபார வருமதிகள் | 304 | |
| தொக்குகள் - 2014 ஏப்ரல் 01 ஆந் திகதியில் | 67 | |
| வங்கி மீதி | 30 | |
| கொள்வனவுகள் / விற்பனைகள் | 367 | 580 |
| விற்பனைத் திரும்பல் | 15 | |
| நிருவாகச் செலவுகள் | 115 | |
| விநியோகச் செலவுகள் | 45 | |
| நிதிச் செலவுகள் | 11 | |
| பங்காளர் மூலதனக் கணக்குகள் – 2014 ஏப்ரல் 01 இல்: | | |
| **ரணில்** | | 1,200 |
| **அனுர** | | 400 |
| **நாமல்** | | 800 |
| பங்காளர் நடைமுறைக் கணக்குகள் – 2014 ஏப்ரல் 01 இல்: | | |
| **ரணில்** | | 45 |
| **அனுர** | | 35 |
| **நாமல்** | 45 | |
| **மொத்தம்** | **3,499** | **3,499** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன :

(1) அறவிடமுடியாக் கடன் ரூ.4,000/- பதிவழிப்புச் செய்யவும் எஞ்சிய கடன்பட்டோர் மீதியில் 1% ஐயுறவுக் கடன் ஏற்பாடு செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

(2) ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மீது நேர்கோட்டு முறையில் கிரயத்தில் கீழ்வரும் வீதங்களில் தேய்மானம் செய்யப்படும் :

கட்டடம் : ஆண்டிற்கு 2.5 %

அலுவலக உபகரணம் : ஆண்டிற்கு 20 %

(3) 2015 மார்ச் 31 ஆந் திகதியில் தொக்குகள் (கிரயத்தில்) ரூ. 119,500/-.

***நீர் செய்ய வேண்டியது ,***

2015 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்காக கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) வருமானக் கூற்று

(b) இலாப நட்டப் பகிர்வுக் கணக்கு (10 மொத்தம்)

## வினா 08

ஒரு தனியுரிமையாளர் வியாபாரமான **நொதேர்ன் டிரேடர்ஸின்** முற்றடக்க வருமானக் கூற்றுக்களைத் தயாரித்த பின்னரான தொகுக்கப்பட்ட பரீட்சை மீதிகள் கீழே தரப்பட்டுள்ளன :

**பரீட்சை மீதி**

| **திகதியில்** | **2015 மார்ச் 31 (ரூ.)** | **2014 மார்ச் 31 (ரூ.)** |
|---|---|---|
| அலுவலக உபகரணம் - கிரயத்தில் | 550,000 | 550,000 |
| மோட்டார் வாகனங்கள் - கிரயத்தில் | 4,900,000 | 4,900,000 |
| திரள் தேய்மானம் - அலுவலக உபகரணம் | (275,000) | (137,500) |
| திரள் தேய்மானம் - மோட்டார் வாகனங்கள் | (2,450,000) | (980,000) |
| தொக்குகுள் - கிரயத்தில் | 165,000 | 105,000 |
| வியாபார வருமதிகள் | 860,000 | 420,000 |
| வங்கி மீதி | 320,000 | 125,000 |
| வியாபார சென்மதிகள் | (695,000) | (720,000) |
| அட்டுறுக்கள் | (13,000) | (65,000) |
| முற்கொடுப்பனவுகள் | 12,000 | 11,500 |
| மூலதனம் | (4,209,000) | (2,600,000) |
| உரிமையாளர் எடுப்பனவுகள் | 860,000 | 174,000 |
| ஆண்டிற்கான இலாபம் | (25,000) | (1,783,000) |
| | - | - |

கீழ்வரும் மேலதிக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன :

(1) ரூ. 2,000,000/- கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டு, கிரயத்தில் ஆண்டிற்கு 25% இல் இரு ஆண்டுகளுக்கு தேய்மானம் செய்யப்பட்டுள்ள மோட்டார் வாகனமொன்று 2015 மார்ச் 31 ஆந் திகதி ரூ. 1,300,000/- விலையில் கடனுக்கு விற்கப்பட்டது. எனினும் இந்த ஊடுசெயல்களை கணக்கேடுகளில் பதிவு செய்வதற்கு கணக்குப் பதிவாளர் தவறியுள்ளார்.

(2) 2015 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்றினைத் தயாரித்த பின்னர், அந்தத் திகதியில் ரூ. 10,000/- கிரயத்தினைக் கொண்ட சில தொக்கு உருப்படிகளின் நிகர தேறுகைப் பெறுமதி (NRV) ரூ. 3,500/- ஆக இருக்கக் காணப்பட்டது.

***நீர் செய்ய வேண்டியது :***

2015 மார்ச் 31 ஆந் திகதியில் **நொதேன் டிரேடர்ஸின்** நிதிநிலைமைக் கூற்றினைத் **தயாரிக்குக**. (10 மொத்தம்)

## வினா 09

2015 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான **றோயல் டெனிஸ் கழகத்தின்** கொள்ளல், கொடுத்தற் கணக்கு கீழ்வருமாறு :

**கொள்ளல், கொடுத்தற் கணக்கு (ரூ.'000)**

| | | | |
|---|---|---|---|
| 2015.01.01. இல் மீதி மு/கொ/வ | 2,300 | துப்புரவாளர் கூலிகள் | 430 |
| அன்பளிப்புகள் | 3,400 | கட்டடப் பராமரிப்பு | 200 |
| சுற்றுப்போட்டிக் கட்டணங்கள் | 1,880 | சென்மதிகள் - டெனிஸ் நுகர்வுப் பொருட்கள் | 930 |
| அங்கத்துவச் சந்தாப்பணம் | 2,360 | வங்கி வைப்புக் கணக்கில் முதலீடு | 2,400 |
| | | திடல் உதவியாளர் கூலிகள் | 950 |
| | | சுற்றுப்போட்டிச் செலவுகள் | 2,150 |
| | | 2015.12.31. மீதி கீ/கொ/செ | 2,880 |
| | **9,940** | | **9,940** |

2015 சனவரி 01 ஆந் திகதி மற்றும் 2015 டிசெம்பர் 31 ஆந் திகதிகளில் **றோயல் டெனிஸ் கழகத்தின்** பிற சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் கீழ்வருமாறு :

| | **2015 சனவரி 01 இல் (ரூ.'000)** | **2015 டிசெம்பர் 31 இல் (ரூ.'000)** |
|---|---|---|
| **சொத்துக்கள் :** | | |
| காணி | 4,000 | 4,000 |
| கட்டடம் | 6,500 | 6,000 |
| டெனிஸ் உபகரணம் | 4,400 | ? |
| நிலுவையிலுள்ள அங்கத்துவச் சந்தா | 0 | 280 |
| டெனிஸ் நுகர்வுப் பொருட் தொக்கு | 950 | 835 |
| முன்செலுத்தப்பட்ட சுற்றுப்போட்டிச் செலவுகள் | 100 | 130 |
| **பரிப்புக்கள் :** | | |
| டெனிஸ் நுகர்வுப் பொருட்களுக்கான சென்மதி | (2,270) | (1,960) |
| முன்னதாகப் பெறப்பட்ட அங்கத்துவ சந்தா | (480) | (350) |

கீழ்வரும் மேலதிகத் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

(1) அன்பளிப்பு முழுவதும் அந்தக் காலத்திற்கான வருமானமாக ஏற்பிசைவு செய்யப்பட வேண்டும்.

(2) ஆண்டின்போது கட்டடங்களுக்கு சேர்ப்பனவுகளோ விற்பனைகளோ இல்லை.

(3) 2015 சனவரி 01 ஆந் திகதியில் டெனிஸ் உபகரணங்களின் எஞ்சியுள்ள பயன்தரு ஆயுட்காலம் 10 ஆண்டுகளாகும். 10 ஆண்டுகளின் முடிவில் ஈற்றுப்பெறுமதி எதுவும் இல்லையெனக் கொள்க.

**நீர் செய்ய வேண்டியது ,**

**றோயல் டெனிஸ் கழகத்திற்கு** கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக :**

(a) 2015 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான வருமான, செலவினக் கணக்கு

(b) 2015 டிசெம்பர் 31 ஆந் திகதி நிதிநிலைமைக் கூற்று (10 மொத்தம்)

*பிரிவு C யின் முடிவு*

## பிரிவு D

இந்தப் பகுதியிலுள்ள ஒரேயொரு வினாவுக்கு விடை தருக.

(25 புள்ளிகள்)

### வினா 10

2015 மார்ச் 31 ஆந் திகதி **வரையறுக்கப்பட்ட ருமேஷ் (தனி) கம்பனியின்** பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது :

| | வரவு (ரூ'000) | செலவு(ரூ'000) |
|---|---|---|
| வருமானம் | | 436,000 |
| விற்பனைக் கிரயம் | 290,930 | |
| விநியோகச் செலவுகள் | 33,500 | |
| நிர்வாகச் செலவுகள் | 51,650 | |
| செலுத்திய பங்கிலாபம் | 2,200 | |
| வங்கி மேலதிகப்பற்று வட்டி | 100 | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் : | | |
| காணி | 30,000 | |
| கட்டடம் | 70,000 | |
| அலுவலக உபகரணம் | 55,500 | |
| திரள் தேய்மானம் - 2014 ஏப்ரல் 01 இல் : | | |
| கட்டடம் | | 25,000 |
| அலுவலக உபகரணம் | | 23,500 |
| காசுக் கையிருப்பு | 1,000 | |
| தொக்குகள் - 2015 மார்ச் 31 இல் | 60,000 | |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 63,000 | 62,200 |
| ஐயுறவுக்கடன் ஏற்பாடு – 2014 ஏப்ரல் 01 இல் | | 1,600 |
| அட்டுறுச் செலவுகள் - 2014 ஏப்ரல் 01 இல் | | 330 |
| வங்கி மேலதிகப் பற்று | | 5,000 |
| பங்கு மூலதனம் - 2014 ஏப்ரல் 01 இல் 500,000 சாதாரண பங்குகள் | | 50,000 |
| கைக்கொள் இலாபம் - 2014 ஏப்ரல் 01 இல் | | 45,750 |
| வருமான வரி ஏற்பாடு (2014 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டு) | | 8,500 |
| **மொத்தம்** | **657,880** | **657,880** |

கீழேயுள்ள மேலதிக தகவல்கள் தரப்பட்டுள்ளன :

(1) கம்பனிக்கு ரூ. 1,500,000/- தர வேண்டியிருந்த வாடிக்கையாளர் ஒருவர் 2015 யூலை 01 ஆந் திகதி இறந்துவிட்டார். அவரிடமிருந்து வருமதியாகவுள்ள இத்தொகை அறவிடமுடியாததாக உள்ளது. ஆண்டு இறுதி வியாபார வருமதிகள் மீதியில் 5% ஐயுறவுக்கடன் ஏற்பாடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(2) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் நேர்கோட்டு முறையில் தேய்மானம் செய்யப்பட வேண்டும். சொத்துக்களின் பயன்தரும் ஆயுட்காலம் கீழ்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளது :

கட்டடங்கள் : 20 ஆண்டுகள்

அலுவலக உபகரணம் : 5 ஆண்டுகள்

(3) 2014 ஏப்ரல் 01 ஆந் திகதி அட்டுறு செலவுகள் கீழ்வருமாறு :

| | ரூ. |
|---|---|
| காப்புறுதிக் கட்டணம் | 130,000 |
| உபகரண பராமரிப்புச் செலவு | 200,000 |

2015 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டின்போது கம்பனியானது காப்புறுதிக் கட்டணமாக ரூ.260,000/- இனையும் உபகரண பராமரிப்புச் செலவாக ரூ. 350,000/- இனையும் செலுத்தியிருந்தது. இந்த இரு செலவுகளும் நிருவாகச் செலவுகளின் கீழ் உட்படுத்தப்பட்டுள்ளன.

2015 மார்ச் 31 ஆந் திகதியில் காப்புறுதிக் கட்டணமாக ரூ. 35,000/- செலுத்த வேண்டியும் ரூ. 20,000/- உபகரண பராமரிப்புச் செலவாக முற்பணமாக செலுத்தப்பட்டும் இருந்தன.

(4) முன்னைய வரிமதிப்பாண்டிற்கான (அதாவது 2013/14) வருமான வரிப் பரிப்பு ரூ. 8,250,000/- ஆக இணங்கப்பட்டுள்ளதுடன் அந்தத் தொகை முற்றிலுமாக செலுத்தித் தீர்க்கப்பட்டது. இருப்பினும் கணக்குப் பதிவாளர் இந்தக் கொடுப்பனவை நிருவாகச் செலவுகளின் கீழ் தாக்கல் செய்துள்ளார்.

வரிமதிப்பாண்டு 2014/15 க்கான வருமான வரிப் பரிப்பு ரூ. 9,300,000/- ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

(5) கம்பனியானது 2014 ஏப்ரல் 01 ஆந் திகதியில் இருந்த ஒவ்வொரு ஐந்து பங்குகளுக்கும் இரண்டு புதிய பங்குகள் எனும் விகிதத்தில் உரிமைப் பங்குகளை பங்கொன்று ரூ. 100/- விலையில் 2014 ஆகஸ்ட் 01 ஆந் திகதி வழங்கியது. இந்தப் பங்ககுள் முற்றிலுமாக வழங்கப்பட்டு அதன் மூலம் பெற்ற தொகை வியாபார சென்மதியாளர் கணக்கில் செலவுப் பதிவு செய்யப்பட்டது.

***நீர் செய்ய வேண்டியது ,***

முகாமைப் பயன்பாட்டிற்காக கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2015 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று (13 மொத்தம்)

(b) 2015 மார்ச் 31 ஆந் திகதியில் நிதி நிலைமைக் கூற்று (12 மொத்தம்)

(மொத்தம் 25 மொத்தம்)

*பிரிவு D யின் முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |